## தலைப்பு - 283 வன பாதுகாப்புத் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வன பாதுகாப்புத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று நிதி நிலைமைகூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,521,122,965 ஆனதுடன் திறைசேரி பிரசுரத்தின் பிரகாரம் அது ரூபா 2,890,484,840 ஆனதில் ரூபா 369,361,875 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | சரியான தரவுகளை உள்ளடக்கி கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | ஆண்டிற்குரிய செலவின விடய இலக்கம் 2401 கீழான திறன் விருத்தி செலவுகள் செலவின பேரேட்டில் மற்றும் பரீட்சை மீதியில் ரூபா 577,426 ஆக காட்டியிருந்த போதும் அப்பெறுமானம் நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 5,577,426 ஆக காட்டியிருந்ததில் மொத்த மூலதன செலவு ரூபா 5 மில்லியனினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2021 ஆண்டினுள் மேற்கொண்ட மூலதன செலவுகள் ரூபா 45,662,554 ஆனதுடன் அது நிதியல்லா சொத்துக்கள் கணக்கறிக்கையில் (SA 82) ரூபா 6,731,826 ஆக கணக்கீடு செய்துள்ளதால் ரூபா 38,930,728 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | திணைக்களத்தால் நிதிக்கூற்றுக்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ள காணி மற்றும் கட்டிட பெறுமதி ரூபா 298,308,700 ஆனதுடன் 2021 ஜனவரி 01 திகதியன்று ரூபா | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 415,455 ஆன உத்தியோகபூர்வ இல்லப் பெறுமதிக்கு ரூபா 3,370,000 சேர்க்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | | |
| (உ) | காணி மற்றும் காணி மேம்பாட்டிற்காக 2021 ஆண்டினுள் ரூபா 1,237,217,599 ஆன செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதனை நிதியல்லா சொத்து கணக்கறிக்கையில் (SA 82) ரூபா 49,081,885 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,188,135,714 நிதியல்லா சொத்துக்கள் கணக்கறிக்கையிற்கு உற்படுத்தியிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | சரியாக கணக்குகளை தயாரித்து தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

திணைக்களத்தால் கீழ் காட்டப்படும் சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகளை முறையாக மற்றும் நாளாதுவரையாக பேணியிருக்காததாக மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **பொறுப்புப் பதிவேடு**<br>நிதிப் பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புப பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | நிதிப் பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புகள் பற்றிய பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டும். |
| (ஆ) | **நிலையான சொத்துப் பதிவேடு**<br>நிதியல்லாத சொத்துக் கணக்குகளின் சரியான தன்மையை பேணிக்கொள்ள திணைக்களத்தால் முறையாக புத்தகங்களை பேணிச் செல்ல வேண்டிய போதும் நிலையான சொத்துப் பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் சொத்துக்களை சரியாக அறிக்கையிடவும், நிலையான சொத்துப் பதிவேடொன்றை பேணிச் செல்லவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | **CC 10 பதிவேடு**<br>2020 ஆகஸ்ட் 28 இன் 02/2020 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் ‘‘பீ’’ கணக்கு தொடர்பாக போதிய கணக்கீட்டு முறைமையொன்றை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை பேணிக் கொள்ள CC 10 பதிவேட்டின் துணையுடன் தயாரிக்கும் கடன் மற்றும் முற்பண பதிவேடு, கடன்படுனர் பதிவேடு, கடன்கொடுனர் பதிவேடு மற்றும் முற்பண கட்டுப்பாட்டுக் கணக்கு, கணக்குகளை சமர்பிக்கும் முறையாக பதிந்து சமப்படுத்த வேண்டிய போதும் மேற்படி எந்தவொறு பதிவேடும் நாளாதுவரையாக்கியிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | **இழப்பு தொடர்பான பதிவேடு**<br>இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் நி.பி 110 பிரகாரம் இழப்பு பற்றிய பதிவேடொன்றை நாளாதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | - மேற்படி - | நி.பி 110 பிரகாரம் இழப்பு பற்றிய பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட மொத்த நிலுவை வருமானம் ரூபா 27,972,306 ஆனதுடன், ஒவ்வொறு ஆண்டினதும் நிலுவை வருமானங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்தை வெவ்வேறாக இனங்காணக் கூடியவாறு எழுத்து மூல தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததனால் அவ்வெண்ணிக்கைகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியாதிருந்தன. | அறிக்கை செய்யப்படும் ஆண்டினுள் நிலுவை தொகைக்கு ஒத்ததாக சேர்க்கப்பட்ட மொத்த அளவாக இதை வருமானக் கணக்கில் குறிப்பிட்டுள்ளதுடன், சில முன்னைய ஆண்டுகளின் கணக்குளை பரிசோத்த போதும் ஏசீஏ 1 இல் நிலுவை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | வருமான நிரலில் அப்பெறுமானங்கள் குறிப்பிடப்படாததால் இவ்வாண்டிலும் அப்பெறுமானங்கள் குறிப்பிடப்படவில்லை. | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று திறைசேரி பிரசுரக் குறிப்பில் SA 82 நிதியல்லா சொத்துக்கள் அறிக்கையில் ரூபா 116,000,000 ஆன காணி பராதீனம் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதும் அது தொடர்பான விரிவான எழுத்து மூல தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுத்தாய்வு செய்து காட்டப்படுகின்றது.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 395(இ) | ஒவ்வொறு மாத முடிவில் அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்க வேண்டிய போதும் 2021 திசெம்பர் மாதம் பிரதான அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கிற்குரிய வங்கி இணக்கக்கூற்று தயாரித்தல் 02 மாதங்களிற்கு அதிக காலமொன்று தாமதித்திருந்ததுடன் 2022 | நி.பி. 395(இ) பிரகாரம் எதிர்காலத்தில் உரிய திகதிக்கு வங்கி இணக்கக்கூற்றை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | நி.பி. 395(இ) பிரகாரம் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஜனவரி மாதத்திற்காக வங்கி இணக்கக்கூற்றும் 2022 மே மாத முடிவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | பிரதான அலுவலகத்தில் வங்கிக் கணக்கொன்றிற்கு உரியதாக வழங்கிய திகதி முதல் 06 மாதங்களிற்கு அதிக காலமொன்ளை விஞ்சிய மாற்றப்படாத ரூபா 50,160 பெறுமதியான 06 காசோலைகள் மற்றும் மாவட்ட வன அலுவலக 08 வங்கிக் கணக்குரியதாக வங்கிக்கு சமர்பிக்கப்படாத ரூபா 133,957 ஆன 67 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க உரிய அலுவலர்கள் அறிவூட்டப்பட்டனர். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 565(3) | பொது வைப்புக் கணக்கு தொடர்பாக சமப்படுத்தல் கணக்கொன்றை தயரிக்க வேண்டிய போதும் திணைக்களம், பொது வைப்புக் கணக்கிற்காக சமப்படுத்தல் கணக்கொன்றை தயாரித்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (iv) | நிதிப்பிரமாணம் 565(5) | வைப்புக் கணக்கு தொடர்பாக பொது 71 மாதிரி படிவத்தில் தயாரிக்கப்படுகின்ற மாதாந்த வைப்பு பொழிப்பு கூற்று அடுத்து வரும் மாதத்தின் இறுதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமரப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த பொழிப்பு கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆம் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 | திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் கணிப்பீட்டுக் குழுவை நியமித்து நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் பண்டக கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதும் | -மேற்படி- | அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் பண்டக கணிப்பீட்டை குறித்த கால |

| | |
|---|---|
| திணைக்களத்தினால் 2021 ஆண்டிற்காக பண்டகக் கணிப்பீடுகளை 2021 ஏப்ரல் 18 திகதிவரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | எல்லையினுள் மேற்கொள்ள வேண்டும். |

## 2.2 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டிறுதியில் வவுனியா மாவட்ட அலுவலகத்திற்கு உரியதாக தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து ரூபா 166,426,259 ஆன நிலுவை கட்டணமொன்று அறவிட வேண்டியதாக காணப்பட்டது. எனினும் அத்தொகையிலிருந்து 75 சதவீத அளவு குறைத்து 25 சதவீத அளவை அதாவது ரூபா 41,606,565 மாத்திரம் அறவிடுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதனால் வவுனியா மாவட்ட அலுவலகத்திற்கு மாத்திரம் ரூபா 124,819,694 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | வவுனியா மாவட்டத்திலிருந்து அறவிட வேண்டிய நிலுவை தொகை தொடர்பாக வன பாதுகாப்பாளரின் (பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம்) இலக்கம் DFC/PLE/06/06/01/2021 மற்றும் 2021.02.22 திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனை பிரகாரம், ஒவ்வொறு நபர்கள் அல்லது நிறுவனங்களினால் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை 2021 மார்ச் 01 முதல் 36 தவணைகளில் அறவிடப்படுகின்றது. | இத் தீர்மானம் காரணமாக அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடரந்தும் ஏற்படுவதை தவிர்க்க தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வன பாதுகாப்புத் திணைக்களம் 2009 மே 06 திகதிய இலக்கம் 1600/18 கொண்ட வர்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2020 ஆண்டு வரை திணைக்கள முகாமைத்துவத்தின் கீழ் நிலவும் காணிகளில் அமைந்துள்ள கருங்கற்களை உடைத்தகற்றும் போது, ஒப்பந்தாரர்களிடமிருந்து பின்வருமாறு கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலவும் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கக் கூடாததுடன் கட்டணத்தை அனுகூலமாகும் வகையில் திருந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| கியுப் அளவு | கல் கியுப் ஒன்றிற்கு அறவிடப்பட்ட அரசின் பங்கு |
|---|---|
| 01-50 | 250 |
| 51-250 | 500 |
| 251-1000 | 750 |
| 1000 இற்கு மேல் | 1000 |

| | | | |
|---|---|---|---|
| | எனினும் 2020 நவம்பர் 13 திகதிய இலக்கம் 14/2020 கொண்ட ஒன்றிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அறவிட வேண்டிய கட்டணத்தை 50 சதவீதத்தால் குறைக்க முன்மொழிந்து அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்கள வருமானம் பெறுமளவில் குறைவடைந்திருந்தது. நிகழ்கால சந்தை நிலைமையின் கீழ் அகழ்வு ஒப்பந்தாரர்களால் தொடர்சியாக கருங்கற்களின் விலையை அதிகரிக்கும் போக்கு காணப்படுவதாலும், அவர்களால் அரச சொத்துக்களை பயன்படுத்தி பெறுமளவு இலாபம் ஈட்டுவதனாலும், முன்னர் அறவிட்ட கட்டண அளவை அதிகரித்து அரசின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்காது அதனை குறைக்க தீரமானம் எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2021 ஆண்டிற்காக வவுனியா கல் குவரி உரிமையாளர்களிடமிருந்து மேலதிக அகழ்விற்காக அறவிட வேண்டிய தொகை ரூபா 15,052,840 ஆனதுடன் 2021 திசெம்பர் 31 திகதியளவில் அவற்றில் மேலும் நிலுவையாக காணப்பட்ட ரூபா 8,054,223 இனை அறவிட்டிருக்கவில்லை. | வவுனியா மாவட்டத்தில் அறவிட வேண்டிய நிலுவை தொகை தொடர்பாக வன பாதுகாப்பாளரின் (பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம்) இலக்கம் DFC/PLE/06/06/01/2021 மற்றும் 2021.02.22 திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் ஒவ்வொறு நபர்கள் அல்லது நிறுவனங்களினால் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை 2021 மார்ச் 01 முதல் 36 தவணைகளில் அறவிடப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை சரியாக கணக்கிட்டு கணக்குகளில் சரியாக காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வவுனியா மாவட்ட வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 58 மர வியாபாரங்கள் பதிவை புதுப்பிக்காததால் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டியதாக இருந்த ரூபா 513,870 ஆன நிலுவை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பதிவை புதுப்பிக்காத மர வியாபாரங்களை நடாத்தி செல்வதாயின், அம் மர வியாபார உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவும் நடாத்திச் செல்வதில்லையாயின், பதிவை இரத்து செய்வதற்காக நடவடிக்கை எடுக்குமாறு உதவி வன உத்தியோகத்தருக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | வியாபாரங்களின் பதிவு தொடர்பாக பின்வூட்டல் செய்து நிலுவை வருமானம் பற்றி அறிக்கையிட குறித்த அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வவுனியா மாவட்ட வன அலுவலக நிர்வகத்தின் கீழ் காணப்படும் அரச காணிகளில் தொலை தொடர் கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு குத்தகை வழங்குவதற்காக 02 தனியார் நிறுவனங்களிலிருந்து 2021 திசெம்பர் 31 திகதியன்று திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 28,501,491 ஆன வருமானம் நிலுவையாக காணப்பட்ட போதும் இறுதி கணக்குகளில் காட்டிருக்கவில்லை. | இந்த 02 கோபுரங்களும் படை பாசறையினுள் அமைந்துள்ளன. வருடாந்த அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான H7/M/20/2015 படிவம் மூலம் முன் நடவடிக்கை மற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தொலை தொடர் கோபுரங்களை நடாத்தி செல்வது தொடர்பாக பின்னூட்டல் செய்து குறித்த வருமானத்தை கணக்ககளுடன் அறிக்கையிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | வவுனியா காட்டில் 10 பர்சஸ் அளவான காணியில் வன பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதியின்றி 2009 ஆண்டு முதல் தனியார் கம்பனியொன்றினால் தொலை தொடர் கோபுரமொன்றை நடாத்தி செல்வதற்காக 2009 சனவரி 01 முதல் 2021 திசெம்பர் 31 வரை 12 ஆண்டுகளிற்குரிய ரூபா 8,290,348 ஆன நிலுவை கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக குறித்த நிறுவனத்தின் முகாமையாளரிற்கு வன பாதுகாவலர் (பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கல்) இனால் இலக்கம்: H12/3/மெனிக்பார்ம்/20/20 மற்றும் 2020.11.11 திகதிய கடிதம் மூலம் செலுத்த வேண்டிய ரூபா 7,350,335 தொகையை செலுத்துமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட்டு கணக்குகளுடன் அறிக்கையிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டிற்காக வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் மூலம் திணைக்கள காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவை நடவடிக்கைகளிற்காக ரூபா 10 மில்லியனான ஏற்பாடு வழங்கியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக உள்நாட்டு பிரயாண செலவின விடயத்தினால் ரூபா 1,500,000 மற்றும் வெளிநாட்டு பிரயாண செலவின விடயத்தினால் ரூபா 1,500,000 ஆன மொத்த தொகையையும் நி.பி. 66 கீழ் காகிதாதிகள் கொள்வனவு செலவின விடயத்திற்கு மாற்றி கட்டுப்பாடின்றி காகிதாதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கவில்லை. | தேவைகளை சரியாக இனங்கண்டு மிக்க முகாமைத்துவத்துடன் செலவிட வேண்டும். |

## 2.4 மிகை செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 திகதியன்று செலவின கூற்றின் பிரகாரம் மிகை செலவினம் அறிக்கையிடப்படாத போதும் மீண்டுவரும் 03 செலவின விடயங்களிற்கு வரவு வைக்க வேண்டிய செலவுகள் மூலதன செலவுகளிற்கு வரவு வைத்து, ஏற்பட்டிருந்த மிகை செலவு வெளிப்படுத்தலை தவிர்த்திருந்தது. கொடுப்பனவு வவுசர் பரிசோதனையின் பிரகாரம் பின்வருமாறு அவை மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 66 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | பேரேட்டு பிரகாரம் செலவினம் | மூலதன செலவின விடயங்களுக்கு வரவு வைத்த செலவினம் | மொத்த செலவினம் | மொத்த தேறிய ஏற்பாடு | மிகை செலவினம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 283-1-1-1301 | 13,987,049 | 1,378,456 | 15,365,505 | 14,000,000 | 1,365,505 |
| 283-1-1-1302 | 994,841 | 68,262 | 1,063,103 | 1,000,000 | 63,103 |
| 283-1-1-1303 | 2,496,912 | 62,820 | 2,559,732 | 2,500,000 | 59,732 |

## 2.5 அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று 03 மாதங்கள் முதல் 05 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 11,756,676 ஆன கடன் மீதி நிலவியதுடன் இக்கடன் தொகையை அறவிடுவது தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயதம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் முகாமைத்துவத்தினால் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அலுவலர் ஒருவர் ஓய்வு பெறும் போது ஓய்வூதிய திணைக்கள இணையப் பக்கத்தில் அவ்அலுவலருக்குரிய தகவல்களை நாளாதுவரையாக சில காலம் எடுப்பதால் அக் கடன் மீதிகளை தீர்க்க நியாயமான காலமொன்று செல்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். மரணித்த, சேவையிலிருந்து வெளியேற்றிய மற்றும் சேவையை விட்டுச் சென்ற அலுவலர்களின் கடனை அறவிட தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள தற்போது | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நுவரஎலிய வலைய பிரதி வன பாதுகாப்பு அலுவலகத்திற்கு இணைந்து சேவையாற்றி ஓய்வு பெற்ற அலுவலர்களில், மூவரிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 215,635 ஆன இடர் கடன் மீதியை தீர்க்கும் போது வலையத்தால் அதனை இரண்டு முறை கணக்கீடு செய்தமையை சீர்செய்கிறேன். | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 இன் 02/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தியின் ஆலோசனை பிரகாரம் முற்பண ‘‘பீ’’ கணக்கு தயாரிப்பது தொடர்பாக 2020 செப்டம்பர் 02 திகதி வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டியில் இலக்கம் 01 இன் (அ) பந்தி பிரகாரம் திணைக்களத்திலிருந்து இடமாறிச் சென்ற அலுவலர் ஒருவரின் மற்றும் இடமாற்றம் பெற்று வரும் அலுவலர் ஒருவரின் கடன் மீதியை 03 மாதங்கள் செல்ல முன்னர் தீர்க்க வேண்டும். அவ்வாறாயினும் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய 03 மாதங்களிற்கும் 12 மாதங்களிற்கும் இற்குமிடையிலான இடர் கடன் ரூபா 202,500 மற்றும் விழா முற்பணம் ரூபா 30,000 இனது கூட்டுத் தொகை ரூபா 232,500 கடன் மீதி மற்றும் ஓராண்டை விஞ்சிய காலமாக நிலவும் ரூபா 10,000 ஆன விழா முற்பண மீதியும் ஓராண்டிற்கு அதிக காலமாக திணைக்களத்திலிருந்து செலுத்த வேண்டிய ரூபா 1,500 ஆன இடர் கடன் மீதியையும் தீர்த்திருக்கவில்லை. | ஊவா தேசிய கல்விக் கல்லூரிக்கு இடமாறிச் சென்ற ஒரு அலுவலரின் இடர் கடன் மீதியான ரூபா 202,500 தொகையை அந் நிறுவனத்தால் தீர்க்க வேண்டிய போதும் 2021 ஆண்டிறுதி வரை தீர்த்திருக்கவில்லை. அவ்வாறே ஏனைய மூன்று அலுவலர்கள் இடமாறிச் செல்லுகையில் குறித்த நிறுவனத்திற்கு அனுப்பிய சம்பள விபரங்களில் விழா முற்பண (ரூபா 30,000) தொகையை உட்படுத்தாது அனுப்பப்பட்டுள்ளது. அதனை இவ்வாண்டிற்கான முற்பண ‘‘பீ’’ கணக்கினூடாக சீர்செய்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். திருகோணமலை பிரதேச செயலகத்திற்கு தீர்க்க வேண்டியிருந்து ரூபா 235,000 ஆன கடன் மீதியை 2021.11.15 திகதி அந்நிறுவனத்தினால் தீர்த்திருந்த போதும் 2021 ஆண்டிறுதி வரை அதனை CIGAS தொகுதியில் நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. அதனை 2022 பெப்ரவரி மாதம் CIGAS தொகுதியில் நாளாதுவரையாக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் கடன் மீதியை தீர்க்க மற்றும் அறிக்கையிடல் மேற்கொள்ள வேண்டும். |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 திகதியன்று திணைக்கள பொது வைப்பு கணக்கு மீதியின் கூட்டுத் தொகை ரூபா 816,368,673 ஆனதுடன் அவற்றில் ரூபா 382,490,455 தொகை 02 வருடங்களை விஞ்சியிருந்தது. அது மொத்த வைப்புக்களின் 47 சதவீதமானது. அதனை நி.பி 571(2) பிரகாரம் அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நி.பி 571(2) பிரகாரம் அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டம் மூலம் ஏற்பாடு ஒதுக்கப்படுவது குறித்த நிதியாண்டின் செலவுகளிற்காக மாத்திரம் ஆகையால் அவ் ஏற்பாடுகளினால் முன்னைய ஆண்டிற்காக பண்டங்களை கொள்வனவு செய்வது ஒதுக்கீட்டுச் சட்டத்தின் சட்ட திட்டங்களை மீறுவதாவதுடன் திணைக்களத்தினால் அச் சட்ட திட்டங்களை மீறி எதிர்வரும் பல ஆண்டுகளிற்கு போதுமாகும் வகையில் ரூபா 3,900,511 செலவிட்டு பண்டங்களை ஒன்று திரட்டப்பட்டிருந்தன. அலுவலர்கள் பாராமுகமாக அதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் செலவின முகாமைத்துவம் மிக்க கீழ் மட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏனைய வினைத்திறனான செயற்பாடுகளிற்கு பயனுறுதிமிக்கதாக பயன்படுத்த முடியுமாக இருந்த பெருந்தொகை பணம் விளைவற்றதாக காகிதாதிகளை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் சட்ட திட்டங்களை மீறாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.8 வங்கிக் கணக்கு செயற்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வைப்புச் செய்த போதும் மாற்றப்படாத 195 காசோலைகளின் பெறுமதி ரூபா 123,481,808 ஆனது. அக் காசோலைகளில் 2 மாதங்களையும் 12 மாதங்களையும் விஞ்சிய ரூபா 649,944 பெறுமதியான 61 காசோலைகளும், ஓராண்டை விஞ்சிய ரூபா 14,126,584 பெறுமதியான 97 காசோலைகளுமானதுடன் அதனை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வங்கியிடம் விசாரித்து சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | வைப்புச் செய்த காசோலைகள் தொடர்பாக வங்கியிடம் விசாரித்து தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் இனங்காணாத 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 2,277,279 ஆன மற்றும் ஓராண்டை விஞ்சிய ரூபா 15,537,059 ஆன வைப்புக்களின் கூட்டுத் தொகை ரூபா 17,814,338 மற்றும் இனங்காணாத 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 7,792 காணப்பட்டதுடன் இந்த வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் சரியாக வங்கி இணக்கக்கூற்றை தயாரிக்க அது தொடரபான அலுவலரிற்கு ஆலோசனை வழங்கியதுடன், எதிர்காலத்தில் பதவிநிலை உத்தியோகத்தரினால் பரீட்சித்து வங்கி இணக்கக்கூற்றை கணக்காய்விற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன். | சரியாக வங்கி இணக்கக்கூற்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைப் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டு முதல் 2021 திசெம்பர் வரை மன்னார் மாவட்ட வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 137.03 ஹெக்டயார் வன ஒதுக்கு காடுகளிற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அலுவலர்கள் தங்கள் கடமைகளை சரியாக நிறைவேற்றியிருந்தால் காலரீதியான வன குற்றங்களை இனங்காணவும் அவை இடம்பெறுவதை தவிரக்க | பதில் வழங்கப்படவில்லை. | அலுவலர்கள் தமது கடமைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் குறைத்துக் கொள்ளவும் இயலுமை காணப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மன்னார் அச்சன்குளம் கடொளான ஒதுக்கிடத்தினுள் 01 ஹெக்டயார் அளவை துப்பரவு செய்து நிலையான கட்டிடமொன்றாக ஆட்டு பட்டியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், 2021 திசெம்பர் 31 அளவிலும் ஏற்படுத்திய நட்டத்தை மதிப்பிட்டிருக்காததுடன் வன பாதுகாப்பு கட்டளை சட்டத்திற்கு இணங்க வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அலுவலர்கள் தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 2018 செப்டம்பர் 18 திகதி முதல் 2021 மார்ச் 02 திகதி வரை மர வியாபாரத்திற்காக விண்ணப்பம் சமர்பித்த 24 வியாபாரிகள் அனுமதிப்பத்திரம் இன்றி வியாபாரத்தை நடாத்திச் செல்வதாக மன்னார் உதவி மாவட்ட வன அலுவலரினால் மன்னார் உதவி வன அலுவலரிற்கு அறிவித்திருந்த போதும் அது தொடர்பாக விசாரிக்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | வவுனியா மாவட்ட வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் காடுகளின் அளவு 111,493.83 ஹெக்டயார் என அவதானிக்கப்பட்டதுடன் 2021 ஒக்டோபர் 15 திகதி அளவிலும் அவற்றில் 72,941.22 ஹெக்டயார் மாத்திரம் வர்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 38,552.61 ஹெக்டயார்களை அளவை செய்திருந்த போதும், வர்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | அளவை செய்துள்ள காடுகளை வர்தமானியில் பிரசுரிக்க விரைவுபடுத்த வேண்டும். |

## 3.2 நிதி விடுவிக்கப்பட்ட போதும் முன்னேற்றம் காணாத கருத்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டில் ESCAMP கருத்திட்ட ஏற்பாடுகளினால் பயிரிடப்பட்ட மடு மற்றும் செட்டியார் நாற்று மேடைகளிலுள்ள 62,046 கன்றுகளை 2021 திசெம்பர் வரையும் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நாற்றுகளை பராமரிப்பதற்காக மேலும் ரூபா 2,528,390 வான விளைவற்ற செலவொன்றை செய்ய வேண்டியிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பயிரிடப்பட்ட நாற்றுக்களை விரைவில் பகிர்ந்தளிக்க வேண்டும். |
| (ஆ) | கடொளான காட்டை மீள்இஸ்தாபிக்கும் கருத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட வன உத்தியோகத்தர் அலுவலகம் 110 ஹெக்டெயார்களில் கடொளான மீள் பயிரிடல் மற்றும் கடொளான காட்டை பாதுகாக்கும் நிகழ்சித் திட்டத்தை ஆரம்பித்திருந்தது. இங்கு வெடிதளதிவ் கடொளான காட்டில் 70,000 கன்றுகளை பயிரிட்டிருந்த போதும் அவற்றில் எந்தவொறு கன்றும் உயிருடன் இருக்கவில்லை. அதன் பிரகாரம் புதிகாக பயிர்களை நாடுவது தோல்வியடைந்திருந்ததுடன் அதற்காக மேற்கொண்ட ரூபா 13,020,330 ஆன தொகையில் பெறும் பகுதி விளைவற்றிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | நடப்பட்ட பயிர்களை பாதுகாத்து பேணிச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 இன் 2/2020 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிட்ட வழிகாட்டியின் இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து 2018 இன் 19 இலக்கம் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவு பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | வருடாந்த நிதிக்கூற்றுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 40 இற்கு அதிகமான வாகனங்கள் பல வருடங்களாக பயன்படுத்தாது விளைவற்று காணப்படுவதுடன் அவற்றை பழுதுபார்த்து தொடரந்து பயன்படுத்த முடியுமானால் அதற்காக அல்லது பராதீனம் செய்ய ஏனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இவ்வாகனங்களின் பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | சொத்துக்களை பயன்படுத்த அல்லது பயன்படுத்த முடியாதெனில் பொருத்தமான முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான 400 இற்கும் அதிக அளவிலான மோடார் சைக்கில காணப்பட்ட போதும் அவற்றின் பெறுமதிகளை சரியாக இனங்கண்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 திகதிக்கு மோடார் சைக்கில்களின் கிரயம் ரூபா 35,000 என இறுதி நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவனத்தின் சொத்துக்களை சரியாக மதிப்பிட்டு சரியாக ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சொத்துக்களை சரியாக கணக்கிட்டு ஆவணப்படுத்த வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 இன் 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் ஒவ்வொறு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீட்டர்கள் செலுத்திய பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பான பாரிய திருத்தத்தின் பின்னர் எனும் சந்தர்ப்பங்களில் முதலில் நேரிடும் சந்தர்ப்பத்தில் எரிபொருள் பாவனையை பரிசோதிக்க வேண்டிய போதும் பல வருடங்களாக திணைக்களத்தினால் வாகனங்களின் எரிபொருள் பாவனையை பரிசோதித்திருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நி.பி. 104(4) பிரகாரம் நட்ட இழப்பு ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களிற்குள் பூரணமான அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டிய போதும், 2020 செப்டம்பர் 23 மற்றும் 2020 ஒக்டோபர் 02 திகதி இடம்பெற்ற 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக 2022 பெப்ரவரி இறுதி வரையும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நி.பி. 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 பெப்ரவரி 05 மற்றும் 2018 மார்ச் 14 ஆகிய திகதிகளில் ஏற்பட்டு 2021 திசெம்பர் 31 திகதியளவில் தீர்த்திருந்த ரூபா 524,400 ஆன இழப்புக்களின் மதிப்பீட்டு பெறுமதியை இறுதி நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (இ) | 2021 நிதிக்கூற்றுக்களில், தொடர்ந்தும் அறவிட வேண்டியதாக அல்லது பதிவலிக்க அல்லது கைவிடவுள்ள நட்டம் தொடர்பான கூற்றில் பிரகாரம், அறவிட வேண்டிய பெறுமதி ரூபா 26,376,719 ஆன போதும் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் அப் பெறுமானம் ரூபா 9,376,719 ஆனதில் ரூபா 17,000,000 வான வித்தியாசம் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | பெறுமதி ரூபா 25,000 இற்குக் குறைந்த வாகன விபத்துக்கள் தொடர்பான ரூபா 71,650 பெறுமதியான 07 கோவைகள் மற்றும் ரூபா 25,000 யை விஞ்சிய வாகன விபத்துக்கள் தொடர்பான ரூபா 6,383,801 பெறுமதியான 24 கோவைகள் திணைக்களத்தில் இருக்வில்லை. | - மேற்படி - | கோவைகளை பாதுகாப்பாக பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 10 ஆண்டுகளிற்கு முன்னர் கமபஹ மாவட்ட வன அலுவலகத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 1,684,460 ஆன பண மோசடியொன்றை 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் திணைக்களத்தால் தீர்த்திருக்கவில்லை. | - மேற்படி - | நி.பி. 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ பலவீனகள்

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் இறுதி அரையாண்டிற்கு மாத்திரம் காகிதாதிகளை கொள்வனவு செய்ய வேண்டிய போதும், எதிர்வரும் பல ஆண்டுகளிற்கு போதுமான வகையில் காகிதாதிகளை கொள்வனவு செய்து அனைத்து காகிதாதிகளும் உரிய பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. அந்த இருப்பின் பெருந்தொகை மார்ச் மாதமளவிலும் குறித்த பிரிவுகளில் எஞ்சியிருந்தன. இந்த இருப்புக்கள், ஆவணப்படுத்தி தேவையான போது விநியோகிக்க அப்பிரிவினுள் ஒழுங்கான கட்டுப்பாட்டு முறையொன்றை நிருவியிருக்கவில்லை. அதன் பிரகாரம் குறித்த பிரிவினுள் காகிதாதிகளின் பயன்பாடு தொடர்பான வெளிப்படைத் தன்மையொன்று காணப்படாததுடன் பல முறைகேடுகள் இடம்பெறும் நிகழ்தகவு காணப்படுவதாக கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாது. | பதில் வழங்கப்படவில்லை. | சரியான களஞ்சிய கட்டுப்பாட்டு முறையொன்றை நிறுவனத்தினுள் இஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஆ) | 2020 நவம்பர் 13 இன் 14/2020 இலக்க ஒன்றிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.2 பந்தி பிரகாரம் குறித்த நிலுவை பணத்தை 03 வருடங்களில் 36 தவணைகளில் செலுத்தி முடிக்க மற்றும் முதல் நிலுவை தவணையை செலுத்திய பின்னர் நிலவும் ஆண்டிற்காக அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. எனினும் அத் தீர்மானத்திற்கு முறணாக வவுனியா மாவட்ட வன அலுவலகத்தினால் அகழ்விற்காக ஒப்பந்ததாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்தது. | 2021 ஆண்டிற்காக கணிப்பொருள் விநியோகிக்க வேண்டிய விதம் தொடர்பான ஆலோசனைகள் 2020.12.23 திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2021.12.31 திகதியன்று முடிவடைந்த அனுமதிப் பத்திர உரிமையாளர்களுக்கு கணிப் பொருட்களை தொடர்ந்து வழங்குவதற்கான வன பாதுகாப்பு நாயகத்தின் | வருமானம் சேகரிக்கும் போது கருங்கற்களை உடைப்பது தொடர்பாக போதிய மேற்பார்வையொன்றை பேணிக் கொள்ள வேண்டியமை மற்றும் சரியான கணக்கிடலின் கீழ் வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | DFC/PLE/06/06/01/2021 மற்றும் 2021.02.22 திகதிய கடிதம் மூலம் ஏற்புடைய அனுமதிப்பத்திர காலத்தை நீடிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அக் கடிதத்தில் குறிப்பிடுவதன் பிரகாரம் அனுமதிப் பத்திர காலத்தை நீடிக்கும் நடவடிக்கை 2021 பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. | |
| (இ) | வவுனியா காட்டில் கருங்காளிகுலம் பீட்டுவே மாமடுவ பிரிவில் அமைந்துள்ள கருங்கற்களிலிருந்து 2021 சனவரி முதல் செப்தம்பர் வரை கற்களை உடைக்க அனுமதிப் பத்திரம் பெற்ற தனியார் ஒப்பந்ததாரரினால் உடன்படிக்கையின் 4 ஆவது நிபந்தனையை மீறி காட்டின் பெறும் பகுதிக்கு பாதிப்பை ஏற்படுத்தி அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அகழ்வு செய்திருக்கையில் அதற்குரிய இழப்பை மதிப்பிடாது 2021 ஒக்டோபர் 15 திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை 6000 கியுப் கற்களை உடைத்தகற்ற அவ் ஒப்பந்ததாரருக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | அனுமதிப்பத்திரதாரருக்கு அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பாக ஏற்பட்ட இழப்பை மீள்நிரப்ப புலியங்குலம் பிரதேசத்தில் அனுமதியற்ற துப்பரவிற்குட்பட்டு பூரணமாக பாதிக்கப்பட்ட 03 ஏக்கர் பகுதிக்கு அவரால் மாவட்ட வன அலுவலகத்தில் வைப்புச் செய்துள்ள பாதுகாப்பு பிணை வைப்புப் பணத்திலிருந்து ரூபா 1,190,800 ஆன பணத்தை பயன்படுத்தி அவ்வன பயிர்களை மீள்நிரப்பி தொடர்ந்து 03 ஆண்டுகளிற்கு பராமரிக்க அவரினால் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தை மீறும் போது தேவையான சட்ட நடவடிக்கை எடுத்து வன வளங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வவுனியா கருங்காலிகுலம் அரச காட்டில் (வெலிகந்த) கருங்கற்களை உடைக்கும் வியாபாரமொன்று 2019 திசெம்பர் 31 திகதி வரை நடாத்திச் செல்ல தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு "C" அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதனை புதுப்பித்த பின்னர் அவரின் கோரிக்கை பிரகாரம் வேறொரு ஒப்பந்ததாரருக்கு ஒப்படைத்தலை மாவட்ட வன அலுவலகத்தினால் செய்திருந்த போதும், கடந்த காலப் பகுதியில் அனுமதிப்பத்திர எல்லையை விஞ்சி அகழ்வு செய்த கருங்கற்களிற்காக தணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 5,085,593 நிலுவை பணத்தை அறவிடுவதற்காக இரு தரப்பினரில் ஒரு தரப்பினரிடமிருந்தாவது ஒருமைப்பாட்டை பெற்றிருக்காததுடன் அந் நிலுவை அனுமதிப்பத்திர | கருங்கல் அகழ்வு அனுமதிப்பத்திரதாரர் ஒருவரான ஆர்.ஏ.நலின் துசார என்பவரால் செலுத்த வேண்டிய நிலுவை பணம் தொடர்பாக கருங்கற்களை அகழும் போது அந் நபரினால் அகழ்வு செய்துள்ள மேலதிக கருங்கல் கியுப் அளவிற்குரிய நிலுவையை ஆர்.ஏ.நலின் துசார என்பவர் செலுத்துவதாக சத்தியக் கடிதமொன்று சமர்பிக்கப்பட்டுள்ளது.<br>மேலும், 2022 ஆண்டு முதல் இக் கருங்கல் வேலைத்தளம் ஆர்.ஏ.நலின் துசார என்பவரின் சகோதரிக்கு | நிலுவை பணத்தை அறவிட தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தை 2022 மே வரை அறவிட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் குறித்த அலுவலர்களினால் அனுமதிப் பத்திர ஒப்படைப்பை முறையாக செய்திருக்காததுடன் நிலுவை பணத்தை அறவிட தேவையான ஒழுங்குகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. | அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த இடத்தில் அகழ்விற்காக செலுத்த வேண்டிய நிலுவையை எந்தவித நிலுவையுமின்றி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 ஆண்டிலிருந்து மீண்டும் இந்த இடத்தில் கருங்கற்களை அகழ்வதற்கு தனது பெயரில் காணப்படும் அனுமதிப்பத்திரத்தை தனது சகோதரனான நலின் துசார என்பவருக்கு ஒப்படைக்குமாறு திருமதி ஆர்.ஏ.டப்லிவ்.சிரானி என்பவரும் மீண்டும் கோரியுள்ளார். அதன் பிரகாரம் ஆர்.ஏ.நலின் துசார என்பவரும் சத்திய கடதாசியொன்றை சமர்பித்து அவ் வியாபாரத்தை தனது பெயரிற்கு மீண்டும் ஒப்படைக்குமாறு கோரியுள்ளார். அதன் பிரகாரம் உரிமையை ஒப்படைக்க மற்றும் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (உ) | மன்னாரில் 16 மர வியாபாரங்களை 2021 ஆண்டிற்காக பதிவை புதுப்பிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2014 திசெம்பர் 03 இன் 1891/26 இலக்க அதிவிஷேட வர்தமானி அறிவித்தலின் 14(3)(1) பந்தி பிரகாரம் அந்த மர வியாபாரங்களின் பதிவை இரத்துச் செய்ய வேண்டிய போதும் அவ்வாறு செய்ய தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பதிவை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மன்னார் மாவட்ட வன அலுவலகத்தினால் வன குற்றம் தொடர்பாக விதிக்கப்பட்ட வழக்குகளுக்குரிய தண்டப்பணம் மற்றும் நட்டத்தை அறவிடுகையில் நீதிமன்றத்தினால் உண்மையாக திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்பதை கணக்கிட்டு அத்தொகையை அறவிட கொள்கையொன்றை | - மேற்படி - | வருமானத்தை சரியாக இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இஸ்தாபித்திருக்கவில்லை. அதன் காரணமாக நீதிமன்றத்தினால் திணைக்கள கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட பணத்தின் மீது அடிப்படையாக காட்டு திணைக்கள நிதியத்தின் வருமானம் கணக்கிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஆண்டினுள் முடிவடைந்த வன குற்ற வழக்குகள் தொடர்பாக திணைக்களத்திற்கு செலவு வைக்கப்பட்ட பண அளவு எவ்வளவு என்பதை நீதிமன்றத்தினால் 2021 திசெம்பர் வரை அறிவித்திருக்காததுடன் அது தொடர்பாக விசாரித்து உரிய பண அளவுகளை அறவிட அலுவலர்கள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பாக தகவல்களை தெளிவாக குறிப்பிடாததுடன் 2021 முன்னேற்றம் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | வருடாந்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை அளவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்தவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியன்று திணைக்களத்தின் அங்கீகார ஆளணி எண்ணிக்கை 3,149 ஆனதுடன் உள்ளவாறான எண்ணிக்கை 2,437 ஆனதில் 712 வெற்றிடங்கள் ஆனது. மேலும் மூன்றாம் நிலை ஊழியர் வெற்றிட எண்ணிக்கையில் வன கட்டுப்பாடு (விஷேட தரம்) அல்லது 18 மாவட்ட வன உத்தியோகத்தர்கள், இரண்டாம் நிலை ஊழியர் வெற்றிட எண்ணிக்கையில் 178 தள வன உத்தியோகத்தர்கள், 194 பீட்டு வன உத்தியோகத்தர்கள் மற்றும் 24 வன | பதில் வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நீட்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் சிற்றூழியர் வெற்றிடங்களிற்கிடையிலான 226 கள உதவியாளர் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.